Accident at Adyar Bridge Workspot

* 278. Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the Pile Driving Machine at Adyar Bridge in Madras collapsed about the 10th July 1972 causing injuries to workers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) 10—7—1972 அன்று 3-வது கண் மையப்படுகை தோண்டுங்காலத்து தோண்டுகருவியை மேல் நோக்கி இழுக்கும் போது அக்கருவியில் பிணைக்கப் பட்டிருந்த இருப்பு இழுகயிறானது சரியான முறையில் இயங்கத் தவறியதால் கீழே விழலாயிற்று. அப்போது காண்ட்ராக்டரின் வேலையாட்கள் நால்வர் காயமடைந்தனர். அவர்கள் உடனே சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப் பப்பட்டனர். அவர்கள் சிகிச்சைக்குப்பின் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப் பட்டனர்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: காயம் பட்ட தொழிலாளர் களுக்கு இழப்பீடு கொடுக்கவேண்டுமென்றால் காண்டிராக்டர்தான் கொடுக்க வேண்டும். அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

Production of Cavendish variety of banana

* 279. Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the names of areas in Tamil Nadu where large quantity of Cavendish variety of banana are grown at present; and

(b) whether there is any proposal to intensify its growth?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுரை மாவட்டம் (கம்பம் பகுதி), திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி, தென்காசி ஆகிய பகுதிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை, திருவ் ணாயபுரம், அந்தநல்லூர், வயலூர், தொட்டியம் ஆகிய வட்டாரங்கள்,